
# திராவிடத்தால் வாழ்கிறோம்

843

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

64

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




# முன் நிற்பார் அண்ணா!

‘நீதிக்கட்சி’ என்றால், பணம் படைத்தோர் மற்றும் ஜமீன்தார்களை அதிகாரத்தில் கொண்டது என்ற எண்ணவோட்டம், பெரியார் தலைமையேற்ற பின்பு கரையத் தொடங்கியது. இயக்கத்தின் கொள்கைக்காக உழைத்தோர் எளியோராக இருந்தாலும், தலைமைப் பீடத்திற்கு வரத் தொடங்கினர். 25.04.1943-ல் நடைபெற்ற திருச்சி மாவட்ட 14-வது நீதிக்கட்சி மாநாட்டில் பெரியாரின் பேச்சிலேயே தெளிவாக வெளிப்பட்டது அது.

‘முனிசிபல் பப்ளிக் ஹாலில்’ மாநாடு கூடியது. இம்மாவட்ட மாநாட்டிற்குத் தஞ்சை, நீடாமங்கலம், கும்பகோணம், பட்டுக்கோட்டை, சிதம்பரம், விருத்தாசலம், காஞ்சிபுரம், சேலம், நாமக்கல், சோழவந்தான், சிவகங்கை, தேவக்கோட்டை, வேலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஆண்கள், பெண்கள் சுமார் 4,000 பேர் வந்திருந்தனர். அரங்குக்கு வெளியேயும் மக்கள் ஒலிபெருக்கி வாயிலாக மாநாட்டு நிகழ்வுகளைக் கேட்டனர்.

வேலூர் சி.பி. சின்னராஜு நீதிக்கட்சியின் தராசுக் கொடியை ஏற்றினார். காஞ்சிபுரம் டி.பி.பொன்னப்பன் மாநாட்டைத் திறந்து வைத்தார். வரவேற்புரை ஆற்ற வேண்டிய அ.அங்கமுத்து அம்பலக்காரரின் தந்தை திடீர் மரணமடைந்துவிட்டதால், தி.பொ.வேதாசலம் வரவேற்புரை நிகழ்த்தினார். நீண்ட நேர கைதட்டல், ஆரவாரத்துக்கு மத்தியில் பேரறிஞர் அண்ணா மாநாட்டுக்குத் தலைமை ஏற்றார். அப்போது அவரின் வயது 34.

நண்பகல் உணவுக்குப் பின் மீண்டும் மாநாடு கூடியபோது, சர் ஏ.டி.பன்னீர்செல்வம் படத்தை இஸ்லாமியர் ஒருவர் திறந்துவைத்தார். ‘திராவிட நாடு’ படத்தை பெரியார் திறந்துவைத்தார். இறுதியாக, மாலையில் டி.பி.வேதாசலம் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது. அவர் தலைமை உரை நிகழ்த்த, சி.பி.சின்னராஜு அதன்பிறகு பேசினார். கம்ப இராமாயணம், பெரிய புராணம் பற்றி பொதுக்கூட்டத்தில் அண்ணா 2 மணி நேரம் பேசினார். ஒரே நாளில் காலையில் இரண்டு மணி நேரம், மாலையில் 2 மணி நேரம் என 4 மணி நேரம் உரையாற்றினார் அண்ணா.

இம்மாநாட்டில் அண்ணாவின் தலைமையை வரவேற்று, வாழ்த்திப் பேசிய பெரியார், “நான்தான் இந்த மாநாட்டிற்கு அண்ணாவைத் தலைவராகப் போடச் சொன்னேன். காரணம், ஒப்புக்கொண்டு வராமல் இருக்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. சண்டைக் காலமாய் இருப்பதால், (இரண்டாம் உலகப் போர்) தலைவர்கள் சுலபத்தில் கிடைக்கமாட்டார்கள். ஆனால், அண்ணா வயதில் சிறியவர், பட்டம்-பதவி-பணம் உள்ள கூட்டத்தில் சேர்ந்தவரல்ல என்று குற்றங் கூறுகிறார்கள் சிலர். நேரு போன்றவர்கள் இந்த ஸ்தானத்திற்கு வரும்போது இந்த வயது கூட இல்லையே!

நமது தலைவர்களான ஆர்.கே.எஸ், எ.ராமசாமி, குமாராஜா, பி.டி.ராஜன், சுப்பராயன், மினரம்பள்ளி ஜமீன் போன்றோரும் இந்த வயதில்தானே இவ்விடத்திற்கு வந்தார்கள்?

இயக்கத்தில் சேர்ந்த காலம் முதல் கொள்கையை மாற்றிக்கொள்ளாதவர் அண்ணா. இப்படிப்பட்டவர் கிடைப்பதுதான் கஷ்டம். நம் இயக்கத்தில் இவரைப் போன்ற இளைஞர்களும் ஏழை மக்களும்தான் அதிகம் இருக்கிறார்கள். அண்ணாவைப் போல, இன்னும் பெரியவர்களும் அவசியமானபோது வருவார்கள்” என்றார்.

மேலும், “நமக்கோ அனேக வேலைகள் ஆக வேண்டும். கும்பல் கும்பலாய் சிறை செல்ல நேர்ந்தாலும், மகிழ்ச்சியோடு செல்ல வேண்டும். நம் ஆயுளில் ஜாதி ஒழிவு போக வேண்டும். அதுதான் நம் இலட்சியம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அதற்கு அண்ணாதுரை முன்னணியில் நிற்பார்” என்று கூறி முடித்தார் பெரியார்..

**...கூட்டம் திரளும்**

## உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் சீர்குலைக்கத் திட்டமா?

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்காமல், முட்டுக்கட்டைப் போடுவதாகத் தமிழ்நாடு அரசு சார்பில், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், ஆளுநருக்குக் கண்டனம் தெரிவித்ததுடன், ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டிருந்த 10 மசோதாக்களும் ஒப்புதல் அளித்ததாக எடுத்துக் கொள்ளப்படும் என்ற தீர்ப்பை, கடந்த ஏப்ரல் 8-ஆம் தேதி வழங்கியது.

ஆளுநர்கள் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கும் மசோதாக்கள் மீது, குடியரசுத் தலைவர் மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் குடியரசுத் தலைவருக்கும் அறிவுரை வழங்கியது. அவ்வாறு குடியரசுத் தலைவர் 3 மாதங்களுக்குள் மசோதாக்கள் மீது முடிவெடுக்கவில்லை என்றால், அதை எதிர்த்து மாநில அரசுகள் உச்சநீதிமன்றத்தில், ரிட் மனு தாக்கல் செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசியல் சாசன விதிகளை மீறும் வகையில் உள்ளது என, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு 14 அரசியல் சாசன கேள்விகள் அடங்கிய குறிப்பை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு கடந்த மே 15-ஆம் தேதி அனுப்பி இருந்தார். இதற்கு தமிழ்நாடு முதல்வர் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், இந்த விவகாரம் தொடர்பாக 8 மாநில முதல்வர்களுக்கு நம் முதல்வர் கடிதம் எழுதியுள்ளார்.

இந்த நிலையில், உச்சநீதிமன்றத் தீர்ப்பை சீர்குலைக்கும் வகையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் கோடைகால நீதிமன்றத்தின் ஜி.ஆர்.சுவாமிநாதன் அமர்வு, அவசர கால வழக்காக இது தொடர்பான வழக்கினைப் பட்டியலிட்டு விசாரிக்க உள்ளது. நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் வெளிப்படையாகவே ஆர்.எஸ்.எஸ் மேடைகளில் பங்கேற்று பேசி வருகிறவர். உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக தொடர்ந்த வழக்கில், ஒரு வாரத்துக்குள் தமிழ்நாடு அரசு பதில் அளிக்க வேண்டுமென நீதிபதி ஜி.ஆர் சுவாமிநாதன் அழுத்தம் கொடுத்துள்ளது உள்நோக்கம் கொண்டது என மக்கள் மன்றங்களில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. நடுநிலையாளர்கள் கவனித்தே வருகின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் பிறந்த நாள் பொக்கிஷம்!



அசோக்குமார்

1996-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு முழுவதிலிமிருந்து கழகத் தொண்டர்கள் படை திரண்டு வந்திருந்தனர். அப்போது, அண்ணா நகரைச் சேர்ந்த நானும் தலைவர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். இந்தப் புகைப்படத்தை இன்றும் பொக்கிஷமாக வைத்துள்ளேன்.

**– அசோக்குமார்,**
**முன்னாள் வட்டத் துணைச் செயலாளர்,**
**அண்ணா நகர் தெற்குப் பகுதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

64

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




# அனைவருக்குமானவர் அண்ணல் அம்பேத்கர்!

அண்ணல் அம்பேத்கருக்கும் திராவிட இயக்கத்திற்கும் இடையிலான தொடர்பு நீண்ட நெடியது. ‘சாதியை அழித்தொழிக்கும் வழி’ என்ற உரையை தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிட்டதில் தொடங்கி, அம்பேத்கர் மன்றங்கள் அமைத்தது, அம்பேத்கர் பெயரில் கலைக்கல்லூரி தொடங்கியது, மயிலாப்பூரில் உள்ள பாலத்திற்கு அம்பேத்கர் பெயரை சூட்டியது, அம்பேத்கரின் நூற்றாண்டை ஓராண்டு காலம் அரசு விழாவாகக் கொண்டாடியது என அம்பேத்கரின் பணிகளைப் போற்றி, புகழைத் திக்கெட்டும் கொண்டு சேர்க்க, பல்வேறு நடவடிக்கைகளை ஆட்சியில் இருந்தபோதும் இல்லாதபோதும் எடுத்து வந்துள்ளது தி.மு.கழகம்.

இதன் நீட்சியாக அம்பேத்கரின் கருத்துகளை எளிய தமிழில், புரிந்துகொள்ளும் நடையில், மொழிபெயர்த்து மக்கள் பதிப்பாக மானிய விலையில் வெளியிடும் முத்தாய்ப்பான அறிவிப்பு 2023-2024 நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றது.

இதனைச் செயல்படுத்த, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், சூலூர் பாவேந்தர் பேரவைத் தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன், ஆய்வாளர் பேராசிரியர் வீ.அரசு ஆகியோர் அடங்கிய ‘அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் மக்கள் பதிப்புக் குழு’ என்ற பெயரில் குழு அமைக்கப்பட்டது. என்.சி.பி.எச். நிறுவனமும் தமிழ் வளர்ச்சித் துறையும் இணைந்து, பொருளடைவு மற்றும் கால வரிசையில் 100 தொகுதிகளாக வெளியிடும் இந்த மாபெரும் பணியை மேற்கொண்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக, எளிய தமிழில் மக்கள் பதிப்பாக முதல் 10 தொகுதிகளை இந்தாண்டு ஜனவரி மாதம் வெளியிட்டார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். இதில் இந்தியாவில் சாதிகள், சாதியை அழித்தொழித்தல், சூத்திரர்கள் யார்?, தீண்டப்படாதோர் அவர்கள் யார்? அவர்கள் ஏன் தீண்டப்படாதோர் ஆனார்கள்?, தீண்டப்படாதோர் அல்லது இந்தியச் சேரிகளின் குழந்தைகள், தீண்டப்படாதோர் - தீண்டாமை/சமூகம், மதம் பற்றிய கட்டுரைகள், இந்து மதத்தின் தத்துவம்/இந்தியா-பொதுவுடைமைக்கான முன் தேவைகள், இந்தியா: புரட்சி-எதிர்ப்புரட்சி/பௌத்தத்தின் வீழ்ச்சி சாதிகளின் தோற்றம், பண்டைய இந்தியா: புரட்சி-எதிர்ப்புரட்சி இந்து மதத்தின் ஆதாரப் பகுதி சாதிதான் ஆகிய தலைப்புகள் நூலாக்கம் பெற்றுள்ளன.

முந்தைய மொழிபெயர்ப்புகளில் இருந்த சிக்கலும் கடினத் தன்மையும் இப்பதிப்பில் முழுமையாக களையப்பட்டிருக்கிறது. அம்பேத்கர் பயன்படுத்திய அரசியல் சொற்களுக்கான பொருளை அறிந்துகொள்ளும் வகையில் ‘கலைச்சொல் அகராதியும்’ சுருக்கமான அளவில் பின்னிணைப்பாக இடம் பெற்றுள்ளது.

அண்ணல் அம்பேத்கரின் முழு வாழ்க்கையைப் பற்றியும் அறிந்து கொள்ளும் வகையில், கால வரிசையில் அம்பேத்கரின் வாழ்க்கைக் குறிப்புகளையும் கொண்டு வெளியாகி இருக்கிறது இந்நூல்.

‘கற்பி, போராடு, ஒன்று சேர்’ என்று உரைத்த அண்ணல் அம்பேத்கரின் சிந்தனைகளைக் கொண்ட ‘அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்’ எளிய தமிழிலும் குறைந்த விலையிலும் வெளியாகி இருக்கிறது. அனைவரது இல்லங்களையும் உள்ளங்களையும் அலங்கரிக்கும் அனைத்து அம்சங்களையும் கொண்டு வெளியாகி இருக்கிறது இந்தத் தொகுப்பு.

**...வாசிப்போம்.**

## நம் வரலாறு

### திருவாங்கூர் கொச்சி அடையாள மறியல்!

7-8-54-இல், மாநில எல்லைப் பிரிப்பின்போது திருவாங்கூர் தமிழர்கள் அறப்போரில் ஈடுபட்டனர். “நாஞ்சில் நாடு தமிழருக்கே” என்று முழங்கிய வண்ணம், செங்கோட்டை, நாகர்கோவில் நீதிமன்றங்களில் கழகத்தினர் அடையாள மறியல் செய்தனர். அறப்போரில் ஈடுபட்ட கழகத்தினர், 110 பேர் கைது செய்யப்பட்டனர். 20 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு 4 நாட்கள் சிறைத்தண்டனையும், ரூ.10 அபராதமும் விதிக்கப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.